www.Padasalai.Net www.TrbTnpsc.com

BASED ON THE UPDATED NEW TEXTBOOK

ENGLISH
மற்றும்
தமிழ் மீடியம்

Limited stock Only

SURA'S

11th std

School Guides

100% SUCCESS




அனைத்து புத்தகக் கடைகளிலும் கிடைக்கிறது

100/100

2023-24 பதிப்பு

Available on

surabooks.com

orders@surabooks.com

call @ 8124201000 | 8124301000

9600175757 / 8056294222 / 7871802000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

சுராவின்

# கணினி பயன்பாடுகள்

## 11–ஆம் வகுப்பு

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள் :**

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் – 2018 **[Govt. MQP-2018]**, முதல் பருவ இடைத்தேர்வு **[First Mid - 2018]**, அரசு பொதுத்தேர்வு மார்ச் 2019, 2020 & மே 2022, **[Mar- 2019, 2020 & May- 2022]**, உடனடித்தேர்வு ஜுன் 2019 & ஆகஸ்ட் – 2022 **[June - 2019; Aug. - 2022]**, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 & 2021 **[Sep. - 2020 & 2021]**, மற்றும் பொது திருப்புதல் தேர்வு 2022 **[CRT - 2022]** வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- உடனடித்தேர்வு ஆகஸ்ட் – 2022 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

**For Orders Contact**
80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 9840926027

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

**2023-24 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

ISBN : 978-93-5330-558-1
**குறியீட்டு எண் : SG 271**

எழுதி வழங்கியவர்
**திரு. சண்முகசுந்தரம்**
(Post Graduate Teacher, Chennai)

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **கணினி பயன்பாடுகள்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். கணினி பயன்பாடுகள் பாடங்களுக்கான வினா விடைகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் கணினி பயன்பாடுகள் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் கணினி பயன்பாடுகள் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், கணினி பயன்பாடுகள் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.
- பதிப்பகத்தார்

***வாழ்த்துக்கள் !!!***

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
9840926027

24/11/2022



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| இயல் எண் | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| | **அலகு I – கணினி அறிமுகம்** | |
| 1. | கணினி அறிமுகம் | 1 - 18 |
| 2. | எண் முறைகள் | 19 - 34 |
| 3. | கணினி அமைப்பு | 35 - 50 |
| 4. | இயக்க அமைப்பின் கோட்பாட்டு கருத்துக்கள் | 51 - 62 |
| 5. | விண்டோஸ்-ல் வேலை செய்தல் | 63 - 80 |
| | **அலகு II – தானியங்கு அலுவலக கருவிகள்** | |
| 6. | சொற்செயலி (Basics) | 81 - 102 |
| 7. | ஓபன் ஆஃபிஸ் கால்க்-ல் வேலை செய்தல் (Basics) | 103 - 120 |
| 8. | நிகழ்த்துதல் (Basics) | 121 - 132 |
| | **அலகு III – HTML மற்றும் CSS பயன்படுத்தி வலைப்பக்கங்களை உருவாக்குதல்** | |
| 9. | இணைய தளம் மற்றும் மின்னஞ்சல் - ஓர் அறிமுகம் | 133 - 157 |
| 10. | HTML - கட்டமைப்பு ஒத்துகள் | 158 - 173 |
| 11. | HTML உரை வடிவூட்டல், அட்டவணை உருவாக்குதல், பட்டியல்கள் மற்றும் இணைப்புகள் | 174 - 196 |
| 12. | HTML - பல்லூடகக் கூறுகள் மற்றும் படிவங்கள் இணைத்தல் | 197 - 216 |
| 13. | CSS - தொடரும் பணி தாள்கள் | 217 - 225 |
| | **அலகு IV – ஜாவாஸ்கிரிப்ட்டை பயன்படுத்தி வலையமைப்பை வடிவமைப்பது** | |
| 14. | ஜாவாஸ்கிரிப்ட் அறிமுகம் | 226 - 241 |
| 15. | ஜாவாஸ்கிரிப்ட்-ல் உள்ள கட்டுப்பாட்டு கட்டமைப்பு | 242 - 255 |
| 16. | ஜாவா எழுத்துவடிவ செயற்கூறுகள் (JavaScript Functions) | 256 - 261 |
| | **அலகு V – கணிப்பொறி நன்னெறி மற்றும் இணையப் பாதுகாப்பு** | |
| 17. | கணிப்பொறி நன்னெறி மற்றும் இணையப் பாதுகாப்பு | 262 - 271 |
| 18. | கணிப்பொறியில் தமிழ் | 272 - 276 |
| | உடனடித்தேர்வு ஆகஸ்ட் 2022 வினாத்தாள் விடைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன. | 277 - 284 |


www.surabooks.com www.Padasalai.Net



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores

அலகு I கணினி அறிமுகம்

# இயல் 1 கணினி அறிமுகம்

## பொருளடக்கம்

1.1. கணிப்பொறி ஓர் அறிமுகம்
1.2. கணிப்பொறியின் தலைமுறைகள்
1.3. ஆறாவது தலைமுறை கணிப்பொறிகள்
1.4. தரவு மற்றும் தகவல்
1.5. கணிப்பொறியின் பகுதிகள்
1.5.1. உள்ளீட்டகம்
1.5.2. மையச் செயலகம்
1.5.3. வெளியீட்டகம்
1.5.4. நினைவகம்
1.5.5. உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்கள்
1.6. கணிப்பொறியைத் தொடங்குதல்

www.surabooks.com www.Padasalai.Net



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



# மதிப்பாய்வு

## பகுதி - அ

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **முதல் தலைமுறை கணிப்பொறிகளில் பயன்படுத்தப்பட்ட பகுதிப் பொருள்** [HY. - 2019; Aug. - 2022]
அ. வெற்றிடக்குழல்
ஆ. திரிதடையகம்
இ. ஒருங்கிணைந்தச் சுற்றுகள்
ஈ. நுண்செயலிகள் **[விடை: அ. வெற்றிடக்குழல்]**

2. **தற்காலிக நினைவகம் எது?** [CRT & May - 2022]
அ. ROM ஆ. PROM
இ. RAM ஈ. EPROM
**[விடை: இ. RAM]**

3. **வெளியீட்டு சாதனத்தை அடையாளம் காண்க.**
அ. விசைப்பலகை ஆ. நினைவகம்
இ. திரையகம் ஈ. சுட்டி
**[விடை: இ. திரையகம்]**

4. **உள்ளீட்டு சாதனத்தை அடையாளம் காண்க.**
அ. அச்சுப்பொறி ஆ. சுட்டி
இ. வரைவி ஈ. படவீழ்த்தி
**[விடை: ஆ. சுட்டி]**

5. **கட்டிட வரைபடத் திட்டம், பிளக்ஸ் அட்டை போன்றவற்றை அச்சிடப் பயன்படும் வெளியீட்டு சாதனம் எது?**
அ. வெப்ப அச்சுப்பொறி
ஆ. வரைவி
இ. புள்ளி அச்சுப்பொறி
ஈ. மைபீச்சு அச்சுப்பொறி **[விடை: ஆ. வரைவி]**

6. **ஏ.டி.எம் இயந்திரங்களில், கீழ்க்கண்டவற்றுள் எது பயன்படுத்தப்படுகிறது?**
அ. தொடுதிரை ஆ. திரையகம்
இ. ஒலி பெருக்கி ஈ. அச்சுப்பொறி
**[விடை: அ. தொடுதிரை]**

7. **ஒரு கணிப்பொறி மீண்டும் தொடங்கும் போது எந்த வகையான தொடங்குதலைப் பயன்படுத்துகிறது.**
அ. உடன் தொடக்கம் [Mar. - 2019; QY. - 2019]
ஆ. தண் தொடக்கம்
இ. தொடு தொடக்கம்
ஈ. மெய் தொடக்கம்
**[விடை: அ. உடன் தொடக்கம்]**

8. **Post-ன் விரிவாக்கம்.** [Govt.MQP - 2018]
அ. Post on self Test
ஆ. Power on Software Test
இ. Power on Self Test ஈ. Power on Self Text
**[விடை. இ. Power on Self Test]**

9. **கீழ்வருவனவற்றுள் எது ஒரு முதன்மை நினைவகமாகும்?** [QY. - 2019]
அ. ROM ஆ. RAM
இ. Flash drive ஈ. Hard disk
**[விடை. ஆ. RAM]**

10. **எந்தக் கணிப்பொறி தலைமுறையில் ஒருங்கிணைந்த சுற்றுகள் பயன்படுத்தப்பட்டது?** [Sep. 2021; CRT- 2022]
அ. முதலாம் ஆ. இரண்டாம்
இ. மூன்றாம் ஈ. நான்காம்
**[விடை. இ. மூன்றாம்]**

## பகுதி - ஆ

**குறு வினாக்கள்.**

11. **கணிப்பொறி என்றால் என்ன?** [Mar.; QY. & HY. - 2019]
கணிப்பொறி என்பது, கொடுக்கப்பட்ட கட்டளைகளை உள்ளீடாகப் பெற்று, அதிவேகமாகச் செயல்பட்டு, விரும்பிய வெளியீட்டை வழங்கும் ஒரு மின்னணு சாதனம் ஆகும்.

12. **தரவு மற்றும் தகவல் வேறுபடுத்துக.**

| தரவு | தகவல் |
|---|---|
| பல்வேறு வகைகளிலும் திரட்டப்படும் செயற்படுத்தப்படாத செய்தித் துணுக்கு தரவு எனப்படும். | தகவல் என்பது முடிவுகளை எடுக்கக் கூடிய உண்மைகளின் தொகுப்பாகும். |
| (எ.கா) கவிதா, 16 | (எ.கா) கவிதாவின் வயது 16 |

13. **மையச் செயலகத்தின் (CPU) பகுதிகள் யாவை?** [Aug. - 2022]
மையச்செயலகத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை கட்டுப்பாட்டகம் (CU- Control Unit), கணித ஏரணச் செயலகம் (ALU - Arithmetic and Logic Unit) மற்றும் நினைவகம் (MU-Memory Unity) ஆகும்.

14. **கணித ஏரணச் செயலகத்தின்(ALU) செயல்பாடு யாது?** [ CRT & May - 2022]
மையச்செயலகத்தின் ஒரு பகுதியாக உள்ள கணித ஏரணச் செயலகம், பல கணிப்பீடு செயல்களைத்


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



தரவின் மீது நிகழ்த்துகிறது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் மற்றும் தருக்க செயல்கள் போன்ற கணிதச் செயல்பாடுகளை கணித ஏரணச் செயலகம் செய்கிறது. மையச் செயலகத்தில் உள்ள உள் நினைவகத்தில் இதன் விடை சேமிக்கப்படுகிறது. கணித ஏரணச் செயலகத்தின் தருக்கச் செயல் திறனே கணிப்பொறியின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துகின்றன.

**15. கட்டுப்பாட்டகத்தின் செயல்களை எழுதுக.**

மையச் செயலகம் – நினைவகம் மற்றும் உள்ளீடு / வெளியீடு சாதனங்களுக்கு இடையே பரிமாறப்படும் தரவைக் கட்டுப்பாட்டகம் கட்டுப்படுத்துகிறது. மேலும் ஒரு கணிப்பொறியின் முழுச் செயல்பாடுகளையும் இது கட்டுப்படுத்துக்கிறது.

**16. நினைவகத்தின் செயல்பாடு யாது?**

கட்டளைகள் நிறைவேற்றத்தயாராக இருக்கும்போது தரவு மற்றும் நிரல்களைத் தற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது. தரவுகளை நிரந்தரமாகச் சேமித்து வைக்க இரண்டாம் நிலை நினைவகம் பயன்படுகிறது.

**17. உள்ளீட்டகம் மற்றும் வெளியீட்டகம் வேறுபடுத்துக.** [QY. - 2019]

| உள்ளீடு | வெளியீடு |
|---|---|
| 1. உள்ளீட்டகம் அனைத்து வகையான தரவுகளையும் கணிப்பொறிக்குள் உள்ளிடப் பயன்படுகிறது. உள்ளிடப்பட்ட தரவுகள் செயலாக்கத்திற்காக நினைவகத்தில் சேமிக்கப்படுகின்றன. | பயனர்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் தகவலைத் தெரிவிக்கும் எந்தவொரு வன்பொருளும் வெளியீட்டகம் எனப்படும். |
| 2. **எ.கா.** விசைப்பலகை, சுட்டி போன்றவை. | **எ.கா.** திரையகம், அச்சுப்பொறி போன்றவை |

**19. முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம் நிலை நினைவகம் வேறுபாடு யாது?**

| முதன்மை நினைவகம் | இரண்டாம் நிலை நினைவகம் |
|---|---|
| அழியும் வகை நினைவுகளாகும். | அழியா வகை நினைவகமாகும். |
| மின்சாரம் இல்லாத போது இதில் சேமிக்கப்பட்ட தகவல்கள் அழிந்துவிடும். | மின்சாரம் இல்லாத போது இதில் சேமிக்கப்பட்ட தகவல்கள் அழியாது. |
| செயலகம் இதில் உள்ள தகவல்களை நேரடியாக செயல்படுத்தும். | செயலகம் இதில் உள்ள தகவல்களை நேரடியாக செயல்படுத்தாது. |
| **எ.கா.** RAM | **எ.கா.** வன்வட்டு, குறுவட்டு, டிவிடி ரோம். |

## பகுதி - இ

### சிறு வினாக்கள்

**20. கணிப்பொறியின் தன்மைகள் யாவை?**

**கணிப்பொறியின் தன்மைகள் :**

(i) வேலையை வேகமாக செய்யும் திறன்
(ii) கணிப்பீடுகளை துல்லியமாக செய்யும் திறன்
(iii) பல்நிரல் செயலாக்கம்
(iv) ஒரே பணியை சலிப்பின்றி திரும்ப திரும்ப செய்யும் திறன்.
(v) பிழையற்ற செயல்பாடு.
(vi) அதிக நம்பகதன்மை உடையது.
(vii) கையடக்க சாதனம்
(viii) இணை செயலாக்கம்
(ix) செயற்கை நுண்ணறிவு
(x) நிபுணர் அமைப்பு
(ix) இணை மற்றும் பகிர்வு கணிப்பீடு

**21. கணிப்பொறியின் பயன்பாடுகளை எழுதுக.**

**கணிப்பொறியின் பயன்பாடுகள் :**

(i) கல்வி
(ii) ஆராய்ச்சி (iii) சுற்றுலா
(iv) வானிலை முன்னறிவிப்பு
(v) சமூக வலைதளம் (vi) மின் வணிகம்
(vii) தொலைத்தொடர்பு
(ரோபாட்டிக்ஸ், நானோ தொழில்நுட்பம், உயிரிப் பொறியியல்)

**22. உள்ளீட்டு சாதனங்கள் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.** [HY. 2019]

(i) உள்ளீட்டகம்அனைத்துவகையானதரவுகளையும் கணிப்பொறிக்குள் உள்ளிடப் பயன்படுகிறது. உள்ளிடப்பட்ட தரவுகள் செயலாக்கத்திற்காக நினைவகத்தில் சேமிக்கப்படுகின்றன.

(ii) (எ.கா) விசைப்பலகை, சுட்டி, வருடி, கைரேகை வருடி, டிராக் பந்து, விழித்திரை வருடி, ஒளிப்பேனா போன்றவை.

**23. ஏதேனும் மூன்று வெளியீட்டு சாதனங்களை விளக்குக.** [QY. - 2019]

(i) **வரைவி :** வரைவி என்பது ஒரு வெளியீடுச் சாதனம் ஆகும். இது தாள்களில் வரைகலை வெளியீட்டை அச்சிட பயன்படுகிறது. இது படங்களை வரைய

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



ஒற்றை நிறம் அல்லது பல வண்ணம் கொண்ட பேனாக்களைப் பயன்படுத்துகிறது.

(ii) **ஒலிபெருக்கிகள் :**

ஒலிபெருக்கிகள் குரல் ஒலியை (audio) வெளியிடுகிறது. பேச்சு இணைப்பாக்கம் மென்பொருளை ஒலிபெருக்கியுடன் பயன்படுத்திக் கணிப்பொறி குரல் வெளியீட்டை வழங்க முடியும். விமான நிலையங்கள், பள்ளிகள், வங்கிகள், இரயில் நிலையங்கள் போன்ற பல இடங்களில் இது மிகவும் பொதுவானதாக உள்ளது.

(iii) **பல்லூடகப் படவீழ்த்தி :**

பல்லூடகப் படவீழ்த்தி, கணிப்பொறி திரையக வெளியீட்டைப் பெரிய திரையில் திரையிடப் பயன்படுகின்றது. இவைகள் வகுப்பறைகளில் அல்லது கூட்ட அரங்குகளில் விளக்கக் காட்சிகளைக் காட்சிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

**24. ஒளியியல் சுட்டி மற்றும் லேசர் சுட்டி வேறுபடுத்துக.**

| வ. எண் | ஒளியியல் சுட்டி | லேசர் சுட்டி |
|---|---|---|
| 1. | சுட்டியின் இயக்கம் மற்றும் முடுக்கம் அளவிடப்படும். | சுட்டியின் இயக்கம் மற்றும் முடுக்கம் அளவிடப்படும் |
| 2. | சுட்டி நகர்வதைத் தீர்மானிக்கப் பந்துக்குப் பதிலாக ஒளிப்பயன் படுத்தப்படுகிறது. | லேசர் சுட்டி அகச்சிவப்பு கதிர்களைப் பயன்படுத்துகிறது. |
| 3. | ஒளியியல் சுட்டியில் மூன்று பொத்தான்கள் உள்ளது. ஒளியியல் சுட்டிக் குறைவான உணர்திறன் கொண்டது. | லேசர் சுட்டி மிகுந்த உணர்திறன் கொண்டது மற்றும் எந்தக் கடினமான மேற்பரப்பிலும் செயல்படும். |

**25. தட்டல் வகை அச்சுப்பொறியைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.** **[CRT- 2022]**

தட்டல் வகை அச்சுப் பொறியில் ஒரு சிறு கம்பி, மை நாடா (ribbon) மீது தட்டி ஒரு புள்ளியை ஏற்படுத்தும் அல்லது ஒரு முழு எழுத்தை தட்டி அந்த எழுத்தை ஏற்படுத்தும். இந்த அச்சுப்பொறிகள் இயந்திர அழுத்தத்தைப் பயன்படுத்தி ஒரே சமயத்தில் பல படிகள் எடுக்க வகை செய்கிறது. வரி அச்சுப்பொறி மற்றும் வரிபுள்ளி அச்சுப்பொறி ஆகியவை தட்டல் வகைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**26. ஆறாவது தலைமுறையின் தன்மைகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.** **[Govt.MQP-2018]**

(i) இணை மற்றும் பகிர்வு கணிப்பீடு

(ii) கணிப்பொறிகள் திறமையாகவும், விரைவாகவும் மற்றும் சிறியதாகவும் இருக்கும்.

(iii) செயற்கை மனிதர்கள் (Robots) உருவாக்குதல்.

(iv) இயற்கை மொழி செயலாக்கம்,

(v) குரல் அறிதல் மென்பொருள் உருவாக்குதல்.

**27. திரையகத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளைப் பற்றி எழுதுக.**

(i) தகவலைத் திரையில் காட்டப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வெளியீட்டு சாதனம் திரையகம் ஆகும். இது தொலைக்காட்சி பெட்டியைப் போன்றது. திரையகத்தின் படங்கள் பிக்செல்ஸ் (PIXELS) எனப்படும் படக் கூறுகளுடன் உருவாக்கப்படுகின்றன.

(ii) ஒரே வண்ணமுடைய திரையகம் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் காட்டுகிறது. வண்ணத் திரையகம் பல நிறங்களில் காட்டுகிறது. சிஆர்டி(கத்தோட் ரே டியூப்) – CRT (Cathode Ray tube), எல்சிடி (லிக்விட் கிரிஸ்டல் டிஸ்பிளே) LCD (Liquid Crystal Display) மற்றும் எல்ஈடி(லைட் ஏமிட்டிங் டையோட்கள்– LED (Light Emitting Diodes) போன்ற பல்வேறு வகையான திரையகங்கள் கிடைக்கின்றன.

(iii) திரையகம் தகவலை விஜிஏ (ஒளி உரு வரைபட வரிசை)–VGA (Video Graphics Array) மூலம் திரையில் காட்டுகிறது. விசைப்பலகை திரையகத்துடன் தொடர்பு கொள்ள ஒளிஉரு வரைபட அட்டை (Video Graphics Card) உதவுகிறது.

(iv) இது கணிப்பொறி மற்றும் திரையகத்தின் இடையே இடைமுகமாக செயல்படுகிறது.

## பகுதி - ஈ

## நெடு வினாக்கள்

**28. ஒரு கணிப்பொறியின் அடிப்படை பாகங்களைத் தெளிவான விளக்கப் படத்துடன் விளக்கு.** **[Mar. - 2019, Sep. 2020; CRT & Aug. - 2022]**

கணிப்பொறி என்பது வன்பொருள் மற்றும் மென்பொருளின் கலவையாகும். கணிப்பொறியில் உள்ள பருபொருள்களான மதர்போர்ட் (motherboard), நினைவகம் (memory), திரையகம் (monitor) மற்றும் விசைப்பலகை போன்றவை வன்பொருள் ஆகும். மென்பொருள் என்பது கணிப்பொறிக்கு வழங்கப்படும் கட்டளை அல்லது கட்டளைகளின் தொகுப்பு ஆகும்.

கணிப்பொறியில், கொடுக்கப் பட்ட ஒவ்வொரு பணியும், உள்ளீடு–செயலாக்கம் – வெளியீடு என்ற சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகிறது.



www.Padasalai.Net
www.Surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores





**கணிப்பொறியின் பகுதிகள்**

(i) **உள்ளீட்டகம் :** உள்ளீட்டகம் அனைத்து வகையான தரவுகளையும் கணிப்பொறிக்குள் உள்ளிடப் பயன்படுகிறது. உள்ளிடப்பட்ட தரவுகள் செயலாக்கத்திற்காக நினைவகத்தில் சேமிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டு விசைப்பலகை, சுட்டி போன்றவை.

(ii) **மையச் செயலகம் :** மையச் செயலகம் என்பது, கணிப்பொறிக்கு வழங்கப்படும் கட்டளைகளைக் கணிப்பொறி புரிந்து கொள்ளும் வகையில் மாற்றி அதனை செயலாக்கம் செய்யும் முதன்மையான பகுதியாகும். மையச் செயலகத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை கட்டுப்பாட்டகம் (CU - Control Unit), கணித ஏரணச் செயலகம் (ALU - Arithmetic and Logic Unit) மற்றும் நினைவகம் (MU - Memory Unit) ஆகும்.

(iii) **கணித ஏரணச் செயலகம் :** மையச்செயலகத்தின் ஒரு பகுதியாக உள்ள கணித ஏரணச் செயலகம், பல கணிப்பீடு செயல்களைத் தரவின் மீது நிகழ்த்துகிறது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் மற்றும் தருக்க செயல்கள் போன்ற கணிதச் செயல்பாடுகளைக் கணித ஏரணச் செயலகம் செய்கிறது.

(iv) **கட்டுப்பாட்டகம் :** மையச் செயலகம் – நினைவகம் மற்றும் உள்ளீடு/வெளியீடு சாதனங்களுக்கு இடையே பரிமாறப்படும் தரவைக் கட்டுப்பாட்டகம் கட்டுப்படுத்துகிறது.

(v) **வெளியீட்டகம் :** பயனர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தகவலைத் தெரிவிக்கும் எந்தவொரு வன்பொருளும் வெளியீட்டகம் எனப்படும். **எடுத்துக்காட்டு:** திரையகம், அச்சுப்பொறி போன்றவை.

(vi) **நினைவகம் :** முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம்நிலை நினைவகம் என இருவகை நினைவகங்கள் உள்ளன. கட்டளைகள் நிறைவேற்றத் தயாராக இருக்கும்போது தரவு மற்றும் நிரல்களை தற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது. தரவுகளை நிரந்தரமாகச் சேமித்துவைக்க இரண்டாம்நிலை நினைவகம் பயன்படுகிறது. முதன்மை நினைவகத்திற்கு எடுத்துக்காட்டு, நேரடி அணுகல் நினைவகம் (RAM - Random Access Memory) ஆகும். வன்வட்டு (Hard disk), குறுவட்டு (CD-ROM) மற்றும் டிவிடி ரோம் (DVD ROM) போன்றவை இரண்டாம்நிலை நினைவகத்திற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**29. கணிப்பொறியின் பல்வேறு தலைமுறைகளை விளக்குக.** [June & QY. - 2019; March 2020; Sep. 2021; May 2022]

| வ. எண் | கணிப்பொறியின் தலைமுறை | காலம் | பயன்படுத்திய முதன்மை சாதனம் | நிறை/குறை |
|---|---|---|---|---|
| 1 | **முதலாம் தலைமுறை** | 1940-1956 | வெற்றிடக்குழல்கள் (Vaccum tubes) | அளவில் பெரியது.<br>அதிக அளவு மின்சாரத்தை எடுத்துக் கொண்டது.<br>அதிக வெப்பம் காரணமாக செயலிழக்கும்.<br>இயந்திர மொழி பயன்படுத்தப்பட்டது. |
| **முதல் தலைமுறை கணிப்பொறிகள்** – ENIAC, EDVAC, UNIVAC 1<br>ENIAC 27 டன் எடை, பரப்பளவு $8 \times 100 \times 3$ அடி, மின்சாரத் தேவை 150 வாட்கள் | | | | |

www.surabooks.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | | | |
|---|---|---|---|---|
| 2. | இரண்டாம் தலைமுறை | 1956-1964 | திரிதடையங்கள் (Transistors) | ➩ முதல் தலைமுறையுடன் ஒப்பிடும்போது அளவில் சிறியது, குறைந்த வெப்பத்தை வெளியேற்றியது.<br>➩ குறைந்த மின்சாரத்தை எடுத்துக் கொண்டது.<br>➩ துளையிட்ட அட்டை, உள்ளீட்டுக்கு பயன்படுத்தப்பட்டது.<br>➩ முதல் இயக்க அமைப்பு (Operating System) உருவாக்கப்பட்டது.<br>➩ தொகுப்பு செயலாக்க அமைப்பு மற்றும் பன்முக இயக்க அமைப்பு (Batch Processing and multiprogramming operating system) உருவாக்கப்பட்டது.<br>➩ இயந்திர மொழி மற்றும் அசெம்பளி மொழி பயன்படுத்தப்பட்டது. |
| இரண்டாம் தலைமுறை கணிப்பொறிகள் – IBM 1401, IBM 1620, UNIVAC 1108 | | | | |
| 3 | மூன்றாம் தலைமுறை | 1964-1971 | ஒருங்கிணைந்த சுற்றுகள் Integrated circuits (IC) | ➩ கணிப்பொறிகள் அளவில் சிறியதாகவும், விரைவாக செயல்படும் மற்றும் அதிக நம்பகத்தன்மையுடையது.<br>➩ குறைந்த மின்சாரத்தை எடுத்துக் கொண்டது.<br>➩ உயர் நிலை மொழி பயன்படுத்தப்பட்டது. |
| மூன்றாம் தலைமுறை கணிப்பொறிகள் – IBM 360 series, Honeywell 6000 series | | | | |
| 4 | நான்காம் தலைமுறை | 1971-1980 | நுண் செயலி மிகப்பெரிய அளவிலான ஒருங்கிணைந்த சுற்றுகள் Very Large Scale Integrated Circuits (VLSI) | ➩ சிறியது மற்றும் வேகமானது.<br>➩ IBM மற்றும் APPLE போன்ற நுண் கணிப்பொறிகள் உருவாக்கப்பட்டது.<br>➩ கையடக்க கணிப்பொறிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 5 | ஐந்தாம் தலைமுறை | 1980-இன்று வரை | மீப்பெரு அளவிலான ஒருங்கிணைந்த சுற்றுகள் (Ultra Large Scale Integration - ULSI) | ➩ இணை செயலாக்கம் (Parallel Processing)<br>➩ கணிப்பொறியின் அளவு மிகவும் கணிசமாகக் குறைக்கப்பட்டது.<br>➩ நிழற்படங்கள் மற்றும் வரைபடங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.<br>➩ செயற்கை நுண்ணறிவு மற்றும் நிபுணர் அமைப்பு (Expert systems) அறிமுகம்.<br>➩ தீர்மானித்தல் மற்றும் தருக்க முறையில் அதிகச் சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் |
| 6. | ஆறாவது தலைமுறை | எதிர் காலத்தில் | | ➩ இணை மற்றும் பகிர்வு கணிப்பீடு<br>➩ கணிப்பொறிகள் திறமையாகவும், விரைவாகவும் மற்றும் சிறியதாகவும் இருக்கும்.<br>➩ செயற்கை மனிதர்கள் (Robots) உருவாக்குதல்.<br>➩ இயற்கை மொழி செயலாக்கம்.<br>➩ குரல் அறிதல் மென்பொருள் உருவாக்குதல். |

www.surabooks.com www.Padasalai.Net
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**30. பின்வருபவற்றை விளக்குங்கள். அ. மைப்பீச்சு அச்சுப்பொறி, ஆ. பல்லூடகப் படவீழ்த்தி, இ. பட்டைக் குறியீடு/ QR குறியீடு படிப்பான்.**

**(அ) மைப்பீச்சு அச்சுப்பொறி :**

மைப்பீச்சு அச்சுப்பொறிகள் கருஞ்சிவப்பு (Magenta), மஞ்சள் (Yellow) மற்றும் சியான் (Cyan) உள்ளடக்கிய மைகுப்பியைப் பயன்படுத்தி வண்ண சாயலை (color tones) உருவாக்குகிறது. ஒரு நிற வண்ணத்தில் (monochrome) அச்சிடுவதற்கு கருப்பு மைகுப்பியை பயன்படுத்துகிறது. மைப்பீச்சு அச்சுப்பொறிகள் ஒரு காகிதத் தாளில் மின்னூட்டம் பெற்ற மையைத் தெளிப்பதன் மூலம் செயல்படுகிறது. இதன் அச்சிடும் வேகம் பொதுவாக ஒரு நிமிடத்திற்கு 1 முதல் 20 பக்கங்களை அச்சிடும் (PPM-Page Per Minute). மைப்பீச்சு அச்சுப்பொறிகள், வெப்பம் மூலம் மின்கலன் சூடாக்குவதால் மை காகிதத்தில் குமிழிகளாக (bubbles) தெளிக்கப்படும் தொழில்நுட்பத்தை அல்லது தகைவு மின்சாரத்தை (piezoelectricity) பயன்படுத்தி மின்சுற்றுகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் சிறிய மின்னோட்டங்கள் ஜெட் வேகத்தில், அச்சுப்பொறியின் உள்ளே மையைப் பரப்புகின்றன.

**(ஆ) பல்லூடகப் படவீழ்த்தி :**

பல்லூடகப் படவீழ்த்தி, கணிப்பொறி திரையக வெளியீட்டைப் பெரிய திரையில் திரையிடப் பயன்படுகின்றது. இவைகள் வகுப்பறைகளில் அல்லது கூட்ட அரங்குகளில் விளக்கக் காட்சிகளைக் காட்சிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

**(இ) பட்டைக் குறியீடு/ QR படிப்பான் :**

பட்டைக் குறியீடு என்பது வெவ்வேறு தடிமன் வரிசையில் அச்சிடப்படும் ஒரு வடிவம் ஆகும். பட்டை குறியீட்டு படிப்பான், பட்டைக் குறியீட்டைப் படித்து அவற்றை மின் துடிப்புகளாக (electric pulses) மாற்றி கணிப்பொறி செயலகத்திற்கு அனுப்பும் ஒரு கருவியாகும். கணிப்பொறியில் தகவலை விரைவாகவும் பிழையின்றிப் பதிவு செய்யவும் இது பயன்படுகிறது. கியூ.ஆர் (Q.R. Quick Response) குறியீடானது, இரு பரிமாண பட்டைக் குறியீடாகும். இது ஒரு கேமரா மூலம் படிக்கப்பட்டப் படத்தை செயல்படுத்த உணர்த்துகிறது.

## அரசு தேர்வு வினாக்கள்

### 3 மதிப்பெண்

**1. மூன்று வெளியீட்டு சாதனங்களை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்குக.** **[Sep. 2021]**

(i) திரையகம் (ii) வரைவி (iii) அச்சுப்பொறிகள்

**திரையகம் :**

தகவலைத் திரையில் காட்டப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வெளியீட்டு சாதனம் திரையகம் ஆகும். இது தொலைக்காட்சி பெட்டியைப் போன்றது. திரையகத்தின் படங்கள் பிக்சல்ஸ் (PIXELS) எனப்படும் படக் கூறுகளுடன் உருவாக்கப்படுகின்றன. ஒரே வண்ணமுடைய திரையகம் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் காட்டுகிறது. திரையகம் தகவலை விஜிஏ ஒளி உரு வரைபட வரிசை)-VGA (Video Graphics Array) மூலம் திரையில் காட்டுகிறது. விசைப்பலகை திரையகத்துடன் தொடர்பு கொள்ள ஒளிஉரு வரைபட அட்டை (Video Graphics Card) உதவுகிறது. இது கணிப்பொறி மற்றும் திரையகத்தின் இடையே இடைமுகமாக செயல்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **1 மதிப்பெண்**

**1. பின்வருனவற்றுள் எந்த கருவியின் மூலம் நாம் இன்று மிக அதிவேகக் கணக்கீட்டுக் கருவிகளை வடிவமைக்கும் பாதையில் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்?**

அ. மடிக்கணினி ஆ. நினைவகக்கருவிகள்
இ. அபாகஸ் ஈ. ENIAC

**[விடை: இ. அபாகஸ்]**

**2. பின்வருவனவற்றுள் எந்த வருடத்தில் 'அனலடிக்கல் இன் ஜீன்' என் கருவி வடிவமைக்கப்பட்டது?**

அ. 1837 ஆ. 1910
இ. 1991 ஈ. 1836

**[விடை: அ. 1837]**

**3. பின்வருவனவற்றுள் எது முதலாம் தலைமுறை கணிப்பொறியின் காலத்தை குறிக்கிறது?**

அ. 1956-1963 ஆ. 1940-1956
இ. 1964-1971 ஈ. 1980-1990

**[விடை: ஆ. 1940-1956]**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **பின்வருவனவற்றுள் எந்த கணிப்பொறி முதல் தலைமுறை கணிப்பொறி கிடையாது?**
அ. ENIAC ஆ. EDVAC
இ. UNIVAC1 ஈ. IBM1401
**[விடை: ஈ. IBM 1401]**

5. **பின்வருவனவற்றுள் எது இரண்டாம் தலைமுறை கணிப்பொறியின் காலத்தை குறிக்கிறது?**
அ. 1940-1956 ஆ. 1956-1964
இ. 1964-1971 ஈ. 1980-1990
**[விடை: ஆ. 1956-1964]**

6. **பின்வருவனவற்றுள் எந்த கணிப்பொறி இரண்டாம் நிலை கணிப்பொறி கிடையாது?**
அ. IBM1401 ஆ. 1BM1620
இ. UNIVAC1108 ஈ. UNIVAC1
**[விடை: ஈ. UNIVAC1]**

7. **பின்வருவனவற்றுள் எந்த காலம் மூன்றாம் தலைமுறை கணிப்பொறியை குறிக்கிறது?**
அ. 1940-1956 ஆ. 1956-1963
இ. 1964-1971 ஈ. 1980-1990
**[விடை: இ. 1964-1971]**

8. **பின்வருவனவற்றுள் மூன்றாம் தலைமுறை பயன்படுத்திய முதன்மை பொருள் யாது?**
அ. வெற்றிடக்குழல் ஆ. திரிதடையகம்
இ. ஒருங்கிணைந்த சுற்றுகள்
ஈ. நுண்செயலிகள்
**[விடை: இ. ஒருங்கிணைந்த சுற்றுகள்]**

9. **பின்வருவனவற்றுள் எந்த கணிப்பொறி மூன்றாம் தலைமுறை கணிப்பொறியை சார்ந்தது?**
அ. IBM1620
ஆ. ENIAC
இ. UNIVAC1
ஈ. Honeywell 6000 Series
**[விடை: ஈ. Honeywell 6000 Series]**

10. **பின்வருவனவற்றுள் எந்த காலம் நான்காம் தலைமுறை கணிப்பொறியை குறிக்கிறது?**
அ. 1940-1956 ஆ. 1971-1980
இ. 1964-1971 ஈ. 1980-1990
**[விடை: ஆ. 1971-1980]**

11. **பின்வருவனவற்றுள் நான்காம் தலைமுறை பயன் படுத்திய முதன்மை பொருள் யாது?**
அ. ஒருங்கிணைந்த சுற்றுகள்
ஆ. திரிதடையகம்
இ. நுண்செயலி
ஈ. வெற்றிடக்குழல் **[விடை: இ. நுண்செயலி]**

12. **பின்வருவனவற்றுள் எந்த தலைமுறையில் கையடக்க கணிப்பொறிகள் அறிமுகமாகின?**
அ. முதலாம் ஆ. இரண்டாம்
இ. மூன்றாம் ஈ. நான்காம்
**[விடை: ஈ. நான்காம்]**

13. **IBM மற்றும் APPLE போன்ற நுண் கணிப்பொறிகள் உருவாக்கப்பட்ட தலைமுறை யாது?**
அ. நான்காம் ஆ. ஐந்தாம்
இ. ஆறாம் ஈ. மூன்றாம்
**[விடை: அ. நான்காம்]**

14. **பின்வருவனவற்றுள் ஐந்தாம் தலைமுறையில் உருவாக்கப்பட்ட மென்பொருள் யாது?**
அ. செயற்கை நரம்பியல் வலையமை
ஆ. செயற்கை நுண்ணறிவு
இ. செயற்கை மனிதர்கள்
ஈ. இயற்கை மொழி செயலாக்கம்
**[விடை: ஆ. செயற்கை நுண்ணறிவு]**

15. **பின்வருவனவற்றுள் குரல் அறிதல் மென்பொருள் உருவாக்கப்பட்ட தலைமுறை யாது?**
அ. ஆறாம் ஆ. நான்காம்
இ. மூன்றாம் ஈ. இரண்டாம்
**[விடை: அ. ஆறாம்]**

16. **செயற்கை மனிதர்கள் உருவாக்கப்பட்ட தலைமுறை எது?**
அ. மூன்றாம் ஆ. நான்காம்
இ. ஐந்தாம் ஈ. ஆறாம்
**[விடை: ஈ. ஆறாம்]**

17. **பின்வருவனவற்றுள் நடைமுறையில் உள்ள கணிப்பொறிகள் எந்த தலைமுறையை சார்ந்தது?**
அ. ஏழாம் ஆ. எட்டாம்
இ. ஆறாம் ஈ. ஐந்தாம்
**[விடை: இ. ஆறாம்]**

18. **பின்வருவனவற்றுள் ENIAC-யை வடிவமைத்தவர் யார்?**
அ. ஜான் வின்ஸ்டன்
ஆ. கிளிப்பேரி
இ. பிரெஸ்பர் எகெர்ட், ஜான் மௌச்சிலி
ஈ. ரிச்சர்டு லயன் **[விடை: ஆ. கிளிப்பேரி]**

19. **பின்வருவனவற்றுள் கணிப்பொறி தலைமுறையில் இணைய செயலாக்கம் துவங்க வழிவகை செய்தது?**
அ. நான்காம் ஆ. ஐந்தாம்
இ. ஆறாம் ஈ. ஏழாம்
**[விடை: இ. ஆறாம்]**

20. **ஆறாவது தலைமுறை, கணிப்பொறிகளின் வியக்கத்தகு மாற்றங்களில் ஒன்று?**
அ. MAN ஆ. PAN
இ. LAN ஈ. WAN
**[விடை: ஈ. WAN]**

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**21.** **பின்வருவனவற்றுள் இயற்கை மொழி செயலாக்கம் என்பது எதன் அங்கமாகும்?**

அ. நிபுணர் அமைப்பு ஆ. செயற்கை மனிதர்கள்
இ. இணைய செயலாக்கம்
ஈ. செயற்கை நுண்ணறிவு

**[விடை: ஈ. செயற்கை நுண்ணறிவு]**

**22.** **பின்வருவனவற்றுள் எது வன்பொருள் மற்றும் மென்பொருளின் கலவையாகும்?**

அ. நிரல்கள் ஆ. கணிப்பொறி
இ. தரவு ஈ. தகவல்

**[விடை: ஆ. கணிப்பொறி]**

**23.** **பின்வருவனவற்றுள் எதன் சுழற்சியின் அடிப்படையாக கொண்டு கணிப்பொறியில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பணியும் செயலாற்றுகிறது?**

அ. B→P→O ஆ. I→P→O
இ. O→P→I ஈ. I→O→P

**[விடை: ஆ. I→P→O]**

**24.** **பின்வருவனவற்றுள் எது செயலாக்கத்தின் போது தரவு மற்றும் கட்டளைகளை இருத்தி வைக்கிறது?**

அ. உள்ளீட்டகம் ஆ. வெளியீட்டகம்
இ. நினைவகம் ஈ. மென்பொருள்

**[விடை: இ. நினைவகம்]**

**25.** **பின்வருவனவற்றுள் எது தரவை, செயலாக்கம் செய்கிறது?**

அ. மையச்செயலகம் ஆ. உள்ளீட்டகம்
இ. நினைவகம் ஈ. வெளியீட்டகம்

**[விடை: அ. மையச்செயலகம்]**

**26.** **பின்வருவனவற்றுள் மிகவும் பொதுவாக பயன்படும் உள்ளீட்டு கருவிகள் யாவை?**

அ. விசைப்பலகை ஆ. சுட்டி
இ. வருடி ஈ. அ மற்றும் ஆ

**[விடை: ஈ. அ மற்றும் ஆ]**

**27.** **பின்வருவனவற்றுள் எது வெளியிட்டு கருவி இல்லை?**

அ. திரையகம் ஆ. படவீழ்த்தி
இ. வருடி ஈ. வரைவி

**[விடை: இ. வருடி]**

**28.** **கணிப்பொறியின் இதயம் என்பது யாது?**

அ. CPU ஆ. HDD
இ. ANN ஈ. NLP

**[விடை: அ. CPU]**

**29.** **பின்வருவனவற்றுள் கணித ஏரணச் செயலகத்தின் எதன் செயல்திறன் கணிப்பொறியின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துகின்றன?**

அ. தருக்கம் ஆ. இருமம்
இ. கணிதம் ஈ. ஒப்பீட்டு

**[விடை: அ. தருக்கம்]**

**30.** **கணிப்பொறியில் எத்தனை வகை நினைவகங்கள் உள்ளன?**

அ. 3 ஆ. 4
இ. 2 ஈ. 5 **[விடை: இ. 2]**

**31.** **கணிப்பொறியின் மையச் செயலகத்தில் எத்தனை பகுதிகள் உள்ளன?**

அ. 4 ஆ. 3
இ. 2 ஈ. 5 **[விடை: ஆ. 3]**

**32.** **பின்வரும் எதன் நினைவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்கள் மின்சாரம் நிறுத்தப்பட்டவுடன் அழிந்துவிடும்?**

அ. ROM ஆ. Hard disk
இ. CD-ROM ஈ. RAM

**[விடை: ஈ. RAM]**

**33.** **பின்வரும் எந்த கருவியில் நுழைவு மற்றும் பதிப்பாய்வு பொத்தான்கள் இருக்கும்?**

அ. விசைப்பலகை ஆ. சுட்டி
இ. வருடி ஈ. வரைவி

**[விடை: அ. விசைப்பலகை]**

**34.** **முதன் முதலில் கணிப்பொறியின் சுட்டியை கண்டுபிடித்தவர் யார்?**

அ. Douglas Engelbart ஆ. Bill English
இ. Apple Lisa ஈ. Henry Babbage

**[விடை: அ. Douglas Engelbart]**

**35.** **"உலர் மின் நகல் இயந்திரம்" போல் செயல்படும் உள்ளீட்டு சாதனம் எது?**

அ. விழித்திரை வருடி
ஆ. ஒளிவழி எழுத்து படிப்பான்
இ. பட்டைக் குறியீடு
ஈ. வருடி **[விடை: ஈ. வருடி]**

**36.** **பின்வருவனவற்றுள் எந்த கருவி கடினமான மற்றும் மோசடிக்கு வழிவகுக்கக்கூடிய கடவுச் சொல்லுக்கு பதிலாக பயன்படுகிறது?**

அ. வருடி
ஆ. கைரேகை வருடி
இ. டிராக் பந்து
ஈ. விழித்திரை வருடி

**[விடை: ஆ. கைரேகை வருடி]**

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**37.** **பின்வரும் எந்த உள்ளீட்டு சாதனம் சுட்டியின் தலைகீழ் வடிவமைப்பைக் கொண்டுள்ளது?**

அ. சுட்டி ஆ. ஒளியியல் சுட்டி
இ. லேசர் சுட்டி ஈ. டிராக் பந்து

**[விடை: ஈ. டிராக் பந்து]**

**38.** **காகிதத்தில் அச்சிடப்பட்ட அல்லது எழுதப்பட்ட எழுத்துகளைக் கண்டறிய பயன்படும் கருவி எது?**

அ. வருடி
ஆ. சுட்டி
இ. டிராக் பந்து
ஈ. ஒளிவழி எழுத்து படிப்பான்

**[விடை: ஈ. ஒளிவழி எழுத்து படிப்பான்]**

**39.** **பின்வரும் எந்த உள்ளீட்டுச் சாதனத்தில் CCD எனும் மின்னணு சில்லுவை பயன்படுத்துகிறது?**

அ. ஒளிவழி எழுத்து படிப்பான்
ஆ. பட்டைக் குறியீடு படிப்பான்
இ. குரல் உள்ளீட்டு சாதனம்
ஈ. இலக்க வகை கேமரா

**[விடை: ஈ. இலக்க வகை கேமரா]**

**40.** **இலக்க வடிவில் நேரடியாகப் படங்களை எடுக்க உதவும் உள்ளீட்டு சாதனம் எது?**

அ. இலக்கவகை கேமரா
ஆ. பட்டைக் குறியீடு படிப்பான்
இ. வருடி
ஈ. டிராக் பந்து

**[விடை: அ. இலக்க வகை கேமரா]**

**41.** **பயனர் கணிப்பொறியுடன் ஊடாடுவதற்கு விரலைப் பயன்படுத்த அனுமதிக்கும் உள்ளீட்டு சாதனம் யாது?**

அ. விசை ஆ. டிராக் பந்து
இ. தொடு திரை ஈ. வருடி

**[விடை: இ. தொடு திரை]**

**42.** **பின்வரும் எந்த உள்ளீட்டு சாதனத்தில் விசைகள் ஒரு குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளது?**

அ. விசைபலகை
ஆ. விசை
இ. பட்டைக் குறியீடு படிப்பான்
ஈ. தொடுதிரை

**[விடை: ஆ. விசை]**

**43.** **பின்வருவனவற்றை எதனை கொண்டு திரையகத்தில் படங்கள் உருவாக்கப்படுகின்றன?**

அ. CRT ஆ. VGA
இ. High Definition (HD) ஈ. PIXELS

**[விடை: ஈ. PIXELS]**

**44.** **பின்வரும் எதன் மூலம் திரையகம் தகவலை திரையில் காட்டுகிறது?**

அ. LCD ஆ. CRT
இ. VGA ஈ. LED

**[விடை: இ. VGA]**

**45.** **எத்தனை பிரிவுகளாக அச்சுப்பொறி பிரிக்கப்படுகிறது?**

அ. 3 ஆ. 2
இ. 4 ஈ. 6 **[விடை: ஆ. 2]**

**46.** **கணிப்பொறி அமைப்பின் முதல் திரையகம் எந்த வருடத்தில் வெளியிடப்பட்டது?**

அ. 1980 ஆ. 1983
இ. 1963 ஈ. 1973

**[விடை: ஈ. 1973]**

**47.** **காகிதத்தாளில் மின்னூட்டம் பெற்ற மையைத் தெளிப்பதன் மூலம் செயல்படும் அச்சுப்பொறி எது?**

அ. லேசர் அச்சுப்பொறி
ஆ. மைப்பீச்சு அச்சுப்பொறி
இ. புள்ளி அச்சுப்பொறி
ஈ. வரிபுள்ளி அச்சுப்பொறி

**[விடை: ஆ. மைப்பீச்சு அச்சுப்பொறி]**

**48.** **முதன் முதலில் இலக்கவகை கணிப்பொறியை கண்டுபிடித்தவர் யார்?**

அ. John Vincent Atanasoft
ஆ. J.Presper Eckect
இ. John Manchhy ஈ. Charles babbage

**[விடை: அ. John Vincent Atanasoft]**

**49.** **முதன் கணிப்பொறியாகக் கருதப்படுவது?**

அ. EDVAC ஆ. UNIVAC1
இ. ENIAC ஈ. IBM1620

**[விடை: இ. ENIAC]**

**50.** **முதன் இலக்கவகை கணிப்பொறியை வடிவமைத்த நிறுவனம் எது?**

அ. Atanasoft Berry Computer
ஆ. AT & T Bey
இ. IBM
ஈ. Microsoft **[விடை: அ. Atanasoft Berry Computer]**

**51.** **தரவுகளை, தகவல்களாக மாற்றம் செய்யும் செயல்முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ. தரவு துணுக்கு ஆ. தரவு செயலாக்கம்
இ. தரவு மேலாண்மை ஈ. தகவல் இணையம்

**[விடை: ஆ. தரவு செயலாக்கம்]**

**52.** **உள்ளீடு → ? → வெளியீடு**

அ. தரவு ஆ. தகவல்
இ. செயலாக்கம் ஈ. கணிப்பொறி

**[விடை: இ. செயலாக்கம்]**

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**53.** கணிப்பொறியில் கட்டளையின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

அ. தகவல் ஆ. தரவு

இ. உள்ளீடு ஈ. நிரல்

[விடை: ஈ. நிரல்]

**54.** பின்வருவனவற்றுள் எது வன்பொருள் கிடையாது?

அ. விசைப்பலகை ஆ. திரையகம்

இ. கட்டளைகள் ஈ. வன்வட்டு

[விடை: இ. கட்டளைகள்]

**55.** பின்வருவனவற்றுள் கணிப்பொறியில் செயலாக்கம் செய்யும் முதன்மையான பகுதி எது?

அ. கணித ஏரணச் செயலகம்

ஆ. மையச் செயலகம்

இ. கட்டுப்பாட்டகம்

ஈ. வெளியீட்டகம்

[விடை: ஆ. மையச் செயலகம்]

**56.** பின்வருவனவற்றுள் எந்த பகுதி தரவு மற்றும் நிரல்களை கணிப்பொறியில் தற்காலிகமாகச் சேமிக்க உதவுகிறது?

அ. நினைவகம் ஆ. மையச் செயலகம்

இ. வெளியீட்டகம் ஈ. கட்டுப்பாட்டகம்

[விடை: அ. நினைவகம்]

**57.** பின்வருவனவற்றுள் எந்த சாதனத்தில் தரவுகளை நிரந்தரமாக சேமித்துவைக்க முடியாது?

அ. வன்வட்டு ஆ. குறுவட்டு

இ. டிவிடிரோம் ஈ. நேரடி அணுகல் நினைவகம்

[விடை: ஈ. நேரடி அணுகல் நினைவகம்]

**58.** மையச்செயலகத்தில் உள்ள பகுதிகள் எத்தனை?

அ. 3 ஆ. 2 இ. 1 ஈ. 4

[விடை: அ. 3]

**59.** தரவுகளை உள்ளீடு செய்ய எத்தனை வகையான விசைப்பலகைகள் உள்ளன?

அ. 3 ஆ. 2 இ. 4 ஈ. 5

[விடை: அ. 3]

**60.** பின்வருவனவற்றுள் விசைப்பலகையின் வகை எது?

அ. கம்பி ஆ. கம்பியில்லா

இ. மாயம் ஈ. இது எல்லாம்

[விடை: ஈ. இது எல்லாம்]

**61.** திரையில் ஒரு இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சுட்டுச் சாதனம் எது?

அ. விசைப்பலகை ஆ. வருடி

இ. வரைவி ஈ. சுட்டி

[விடை: ஈ. சுட்டி]

**62.** பின்வருவனவற்றுள் ஒளிப் பயன்படுத்தப்படும் சுட்டி எது?

அ. இயந்திரவியல் ஆ. ஒளியியல்

இ. லேசர் ஈ. எதுமில்லை

[விடை: ஆ.ஒளியியல்]

**63.** அகச்சிவப்பு கதிர்களைப் பயன்படுத்தும் சுட்டி எது?

அ. ஒளியியல்

ஆ. இயந்திரவியல்

இ. லேசர்

ஈ. இவை எல்லாம்

[விடை: இ. லேசர்]

**64.** டக்ளஸ் எங்கெல் பர்ட் யாருடைய உதவியுடன் கணிப்பொறியின் சுட்டியை கண்டுபிடித்தார்?

அ. Berry ஆ. Steve Kirsh

இ. Bill English ஈ. Presper Eckert

[விடை: இ. Bill English]

**65.** பின்வருவனவற்றுள் கணிப்பொறி நினைவகத்தில் நேரடியாகத் தகவலை உள்ளிட பயன்படும் சாதனம் எது?

அ. விசைப்பலகை

ஆ. வருடி

இ. சுட்டி

ஈ. வரைவி

[விடை: ஆ. வருடி]

**66.** திரையில் நேரடியாக வரையும் தன்மை கொண்ட கருவி எது?

அ. டிராக் பந்து

ஆ. ஒளி வழி எழுத்து படிப்பான்

இ. பட்டைகுறியீடு படிப்பான்

ஈ. ஒளிப் பேனா

[விடை: ஈ. ஒளிப் பேனா]

**67.** வெவ்வேறு தடிமன் வரிசையில் அச்சிடப்படும் ஒரு வடிவம் என்பது

அ. இயந்திர குறியீடு ஆ. பட்டைக் குறியீடு

இ. பொருள் குறியீடு ஈ. ஒளியியல் குறியீடு

[விடை: ஆ. பட்டைக் குறியீடு]

**68.** CCD எனும் மின்னணு சில்லு பொருந்திய சாதனம் எது?

அ. ஒளிப்பேனா ஆ. தொடுதிரை

இ. வருடி ஈ. இலக்கவகை கேமரா

[விடை: ஈ. இலக்கவகை கேமரா]

**69.** சுட்டி அல்லது விசைப்பலகைக்கு மாறாக பயன்படும் சாதனம்?

அ. ஒளிப்பேனா ஆ. தொடுதிரை

இ. இலக்கவகை கேமரா ஈ. வருடி

[விடை: ஆ. தொடுதிரை]

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**70.** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலைமாற்றிகளை கொண்டு அழுத்துவதன் மூலம் செயல்படும் கருவியின் பெயர் என்ன?

அ. விசைப்பலகை ஆ. சுட்டி
இ. தொடுதிரை ஈ. விசை

[விடை: ஈ. விசை]

**71.** வரைகலை வெளியீட்டை அச்சிட பயன்படும் சாதனம் எது?

அ. வருடி ஆ. தொடுதிரை
இ. வரைவி ஈ. டிராக் பந்து

[விடை: இ. வரைவி]

**72.** பின்வருவனவற்றுள் தட்டல் அச்சுப்பொறியின் வகை எது?

அ. மைப்பீச்சு ஆ. Fax
இ. புள்ளி அச்சுப்பொறி ஈ. லேசர்

[விடை: இ.புள்ளி அச்சுப்பொறி]

**73.** புள்ளி அச்சுப்பொறியின் அச்சிடும் வேகம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

அ. CPS ஆ. BPS
இ. PPS ஈ. Pages/Second

[விடை: அ. CPS]

**74.** ஒரே சமயத்தில் பல படிகள் எடுக்க வகை செய்யும் அச்சுபொறி எது?

அ. லேசர் ஆ. மைப்பீச்சு
இ. தட்டா அச்சுப்பொறி ஈ. வரிபுள்ளி

[விடை: ஈ. வரிபுள்ளி]

**75.** கணிப்பொறி திரையக வெளியீட்டைப் பெரிய திரையில் திரையிடப் பயன்படும் சாதனம் எது?

அ. திரையகம் ஆ. LED
இ. பல்லூடகப் படவீழ்த்தி ஈ. CRT

[விடை: இ.பல்லூடகப் படவீழ்த்தி]

**76.** பின்வரும் எந்த நிரல் கணிப்பொறியில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் புறக்கருவிகளும் இயங்கும் நிலையில் உள்ளதா என்பதை ஆய்வு செய்யும்?

அ. POST ஆ. BIOS
இ. MAR ஈ. MBR

[விடை: அ. POST]

**77.** கணிப்பொறியில் இணைக்கப்பட்டுள்ள வன்பொருள்கள் இயங்காத நிலையில் நமக்கு பிழையை தெரிவிக்கும் மென்பொருள் எது?

அ. BIOS ஆ. RAM
இ. POST ஈ. Strap Loader

[விடை: அ. BIOS]

**78.** கணிப்பொறியில் எத்தனை வகையான தொடங்குதல் முறைகள் உள்ளன?

அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5

[விடை: அ. 2]

**79.** பருப்பொருள்கள் என்பது யாது?

அ. மென்பொருள் ஆ. தரவு
இ. தகவல் ஈ. வன்பொருள்

[விடை: ஈ. வன்பொருள்]

**கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1.** பின்வருவனவற்றுள் .......... என்பது முதல் கணக்கீடு கருவியாகும்?

அ. ENIAC
ஆ. அனலடிக்கல் இன்ஜின்
இ. EDVAC
ஈ. அபாகஸ்

[விடை: ஈ. அபாகஸ்]

**2.** இரண்டாம் தலைமுறை கணிப்பொறியில் பயன்படுத்திய முக்கியக் கூறு ....................

அ. வெற்றிடக்குழல் ஆ. டிரான்சிஸ்டர்
இ. ஒருங்கமை சுற்றுகள் ஈ. நுண்செயலி

[விடை: ஆ. டிரான்சிஸ்டர்]

**3.** ஐந்தாம் தலைமுறையின் காலம் ........................

அ. 1971-1980 ஆ. 1980 இன்றுவரை
இ. 1964-1971 ஈ. 1940-1956

[விடை: ஆ. 1980-இன்றுவரை]

**4.** மீ-கடத்தி பயன்படுத்திய தலைமுறை ....................

அ. நான்காம் ஆ. ஆறாம்
இ. ஐந்தாம் ஈ. மூன்றாம்

[விடை: இ. ஐந்தாம்]

**5.** NLP-யின் விரிவாக்கம் .......................

அ. National Language Problem
ஆ. Natural Language Processing
இ. Network Language Program
ஈ. Network Local Processing

[விடை: ஆ. Natural Language Processing]

**6.** ANN-ன் விரிவாக்கம் .....................

அ. Artical Neural Network
ஆ. Artificial Neurons Network
இ. Artificial Neural Networks
ஈ. Artificial Network Neurons

[விடை: இ. Artificial Neural Networks]

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



7. பருபொருள்கள் என்பது ...................

அ. மென்பொருள் ஆ. தரவு
இ. தகவல் ஈ. வன்பொருள்

[விடை: ஈ. வன்பொருள்]

8. கட்டளைகளின் தொகுப்பு என்பது ..........

அ. மென்பொருள் ஆ. வன்பொருள்
இ. தகவல் ஈ. தரவு

[விடை: அ. மென்பொருள்]

9. USB-யின் விரிவாக்கம் ....................

அ. Universal Serial Bus
ஆ. Uniform Serial Bus
இ. Uniform Serious Bus
ஈ. Universal Serial BIOS

[விடை: அ. Universal Serial Bus]

10. இயந்திரவியல் சுட்டி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ..........

அ. 1978 ஆ. 1988
இ. 1968 ஈ. 1958

[விடை: இ.1968]

11. திரையகம் .............. வகைப்படும்

அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5

[விடை: ஆ. 3]

12. CRT-யின் விரிவாக்கம் ......................

அ. Cathode Ray Tube
ஆ. Cathode Radio Tube
இ. Cathode Ray Techonology
ஈ. Cathode Radio Technology

[விடை: அ. Cathode Ray Tube]

13. LCD-யின் விரிவாக்கம் ...................

அ. Liquid Cathode Diodes
ஆ. Liquid Cluster Display
இ. Liquid Crystal Display
ஈ. Live Extract Display

[விடை: இ. Liquid Crystal Display]

14. முதல் திரையகம் உருவாக்கப்பட்ட ஆண்டு ................

அ. 1974 ஆ. 1972 இ. 1971 ஈ. 1973

[விடை: ஈ. 1973]

15. VGA-யின் விரிவாக்கம் ................

அ. Visual Graphics Adapter
ஆ. Video Graphics Adapter
இ. Video Graphics Array
ஈ. Voice Graphics Array

[விடை: இ. Video Graphics Array]

16. LED யின் விரிவாக்கம் .........................

அ. Liquid Cathode Diodes
ஆ. Live Extract Display
இ. Light Emitting Diodes
ஈ. Liquid Cluster Display

[விடை: இ. Light Emitting Diodes]

17. CPU-யின் விரிவாக்கம் ..................

அ. Central Processing Unique
ஆ. Central Processor Unique
இ. Central Processing Unit
ஈ. Central Processor Unit

[விடை: இ. Central Processing Unit]

18. ALU-யின் விரிவாக்கம் ...............

அ. Arithmetic Logical Unit
ஆ. Accumulator Logical Unit
இ. Arithmetic Language Unit
ஈ. ஏதுமில்லை

[விடை: அ. Arithmetic Logical Unit]

19. CCD-யின் விரிவாக்கம் ................

அ. Coupled Changed Device
ஆ. Charged Coupled Device
இ. Changed Couple Device
ஈ. Camera Changed Devider

[விடை: ஆ. Charged Coupled Device]

20. GUI-யின் விரிவாக்கம் ............................

அ. Geographical User Interface
ஆ. Graphical User Information
இ. Geographical User Information
ஈ. Graphical User Interface

[விடை: ஈ.Graphical User Interface]

21. CPS-யின் விரிவாக்கம் ..................

அ. Character Per Second
ஆ. Copy per Second
இ. Code per Second
ஈ. Chapter per Second

[விடை: அ. Character Per Second]

22. VLSI-ன் விரிவாக்கம் .................

அ. Verified Logical Scale integrated Circuits
ஆ. Very Logical Small Integer Circuits
இ. Very Large Scale Integrated Circuits
ஈ. Volatile Large Scale Integrated Circuits

[விடை: இ. Very Large Scale Integrated Circuits]

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**கீழ்க்கண்டவற்றுள் எது சரியானவை?**

**1. பின்வரும் கட்டளையில் சரியானது எது?**

(i) முதலாம் தலைமுறை கணிப்பொறியில் இயந்திர மொழி பயன்படுத்தப்பட்டது.
(ii) மூன்றாம் தலைமுறை கணிப்பொறி நம்பகத்தன்மையற்றது.
(iii) ஐந்தாம் தலைமுறை கணிப்பொறியில் குரல் அறிதல் மென்பொருள் உருவாக்கப்பட்டது.
(iv) நான்காம் தலைமுறை கணிப்பொறியில் நுண் செயலி பயன்படுத்தப்பட்டது.

அ. (i) மட்டும்
ஆ. (ii) மற்றும் (iii)
இ. (iii) மற்றும் (iv)
ஈ. (i), (ii) மற்றும் (iv)

**[விடை: ஆ. (ii) மற்றும் (iii)]**

**2. பின்வரும் எந்த கட்டளைகள் ஐந்தாம் தலைமுறையை சார்ந்தது இல்லை?**

(i) மீ-கடத்தி பயன்படுத்தவில்லை
(ii) கணிப்பொறியின் அளவு சிறியது
(iii) அதிக சிக்கலான பிரச்னைகளுக்கு தீர்வு காணாது
(vi) செயற்கை நுண்ணறிவு அறிமுகம்
(v) உயர் நிலை மொழி பயன்படுத்தவில்லை

அ. (i), (ii) மற்றும் (iii)
ஆ. (ii) மற்றும் (v)
இ. (iii), (v) மற்றும் (iv)
ஈ. (i), (iii) மற்றும் (v)

**[விடை: ஈ. (i), (iii) மற்றும் (v)]**

**கீழ்க்கண்டவற்றுள் எது தவறானவை?**

**1.** (i) ஆறாம் தலைமுறை கணிப்பொறிகள், அறிவு சார்ந்த, கணிப்பொறிகள் என வரையறுக்கபடமாட்டாது.
(ii) ஆறாம் தலைமுறை கணிப்பொறியில், இணை கணிப்பீடு முதல் முதலில் பயன்படுத்தப்பட்டது.
(iii) ஆறாம் தலைமுறை கணிப்பொறியில் வலையமைப்பு என்பது வியத்தகு மாற்றங்களில் ஒன்று இல்லை.
(iv) செயற்கை நரம்பியல் வலையமைப்பின் அடிப்படையில் ஆறாவது தலைமுறை கணிப்பொறிகள் இல்லை.

அ. (i) மற்றும் (iii) ஆ. (ii) மற்றும் (iv)
இ. (ii) மட்டும் ஈ. இவை அனைத்தும்

**[விடை: ஈ. இவை அனைத்தும்]**

**பொருத்துக**

**1.**

| | | |
|---|---|---|
| (i) முதலாம் தலைமுறை | - | 1. ஒருங்கிணைந்த சுற்றுகள் |
| (ii) இரண்டாம் தலைமுறை | - | 2. நுண் செயலி |
| (iii) மூன்றாம் தலைமுறை | - | 3. இணை செயலாக்கம் |
| (iv) நான்காம் தலைமுறை | - | 4. வெற்றிடக்குழல் |
| (v) ஐந்தாம் தலைமுறை | - | 5. இணை கணிப்பீடு |
| (vi) ஆறாம் தலைமுறை | - | 6. திரிதடையகம் |

அ. 2,3,5,1,4,6 ஆ. 4,6,1,2,3,5
இ. 6,5,4,1,2,3 ஈ. 1,3,2,5,6,4

**[விடை: ஆ. 4,6,1,2,3,5]**

**2.**

| | | |
|---|---|---|
| (i) EDVAC | - | 1. இரண்டாம் தலைமுறை கணிப்பொறி |
| (ii) APPLE | - | 2. ஐந்தாம் தலைமுறை கணிப்பொறி |
| (iii) IBM 1620 | - | 3. முதல் தலைமுறை கணிப்பொறி |
| (iv) Expert System (நிபுணர் அமைப்பு) | - | 4. நான்காம் தலைமுறை கணிப்பொறி |

அ. 4, 3, 1, 2 ஆ. 3, 1, 2, 4
இ. 4, 1, 2, 3 ஈ. 3, 4, 1, 2

**[விடை: ஈ. 3, 4, 1, 2]**

**3.**

| | | |
|---|---|---|
| (i) தகவல் | - | 1. கட்டளையின் தொகுப்பு |
| (ii) வன்பொருள் | - | 2. நிரல்களின் தொகுப்பு |
| (iii) தரவு | - | 3. அர்த்தமுள்ள தகவலை தெரிவிக்கின்றது |
| (iv) நிரல் | - | 4. மதர் போர்ட் |
| (v) மென்பொருள் | - | 5. அடிப்படை செய்தித்துணுக்கு |

அ. 3,4,5,1,2, ஆ. 4,5,1,2,3
இ. 1,3,4,5,2 ஈ. 2,3,5,4,1

**[விடை: அ. 3,4,5,1,2]**

**4.**

| | | |
|---|---|---|
| (i) வெளியீட்டு சாதனம் | - | 1. தரவு மற்றும் தகவலை உள்ளீட உதவும் |
| (ii) மையச்செயலகம் | - | 2. தரவுகளை தற்காலிகமாக சேமித்து வைக்கும் |


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(iii) முதன்மை செயலகம் – 3. கட்டளைகளை செயலாக்கம் செய்ய உதவும்

(iv) உள்ளீட்டு சாதனம் – 4. தரவு மற்றும் தகவல் திரையகத்தில் காட்ட உதவும்.

அ. 3,1,2,4, ஆ. 4,1,2,3

இ. 2,1,3,4 ஈ. 3,2,1,4

[விடை: ஆ. 4,1,2,3]

5.

(i) நிபுணர் அமைப்பு – 1. இரண்டாம் தலைமுறை

(ii) தொகுப்பு செயலாக்க அமைப்பு – 2. நான்காம் தலைமுறை

(iii) இயற்கை மொழி செயலாக்கம் (NLP) – 3. ஆறாம் தலைமுறை

(iv) மடிக்கணினி அறிமுகம் – 4. ஐந்தாம் தலைமுறை

அ. 4, 1, 3, 2 ஆ. 1, 3, 2, 4

இ. 3, 4, 1, 2 ஈ. 4, 3, 1, 2

[விடை: அ. 4, 1, 3, 2]

## குறுவினாக்கள். 2 மதிப்பெண்கள்

**1. VLSI, ULSI-யின் விரிவாக்கத்தை எழுதுக**

VLSI -Very Large Scale Integrated Ciruict

ULSI -Ultra Large Scale Integration

**2. இயற்கை மொழி செயலாக்கம் என்பது யாது?**

இயற்கை மொழி செயலாக்கம் என்பது செயற்கை நுண்ணறிவு ஒரு அங்கமாகும். இது மனித மொழியைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு கணிப்பொறி நிரலை உருவாக்குவதற்கான திறனை வழங்குகிறது.

**3. மையச்செயலகம் என்பது யாது?**

மையச் செயலகம் என்பது, கணிப்பொறிக்கு வழங்கப்படும் கட்டளைகளை, கணிப்பொறி புரிந்து கொள்ளும் வகையில் மாற்றி அதனை செயலாக்கம் செய்யும் முதன்மையான பகுதியாகும். இது நினைவகம், உள்ளீடு மற்றும் வெளியீடு போன்ற மற்ற அனைத்துச் சாதனங்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது. இது தரவை உள்ளீடாகப் பெற்று, கொடுக்கப்பட்ட கட்டளைகளின் படி செயல்படுத்தி, வெளியீட்டை வெளியிடுகிறது.

**4. உலர் மின்நகல் இயந்திரம் போல் செயல்படும் சாதனத்தை பற்றி எழுதுக**

வருடி ஒரு "உலர் மின்நகல் இயந்திரம்" (xerox machine) போல் செயல்படுகிறது. எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட, புகைப்படங்களை உள்ளடக்கிய எந்தவொரு தகவலையும் வருடிக் கணிப்பொறிக்கு இலக்கமுறை தகவலாக மாற்றியமைக்கிறது.

**5. இலக்கவகை கேமராவை பற்றி குறிப்பு வரைக.**

**இலக்கவகை கேமரா (Digital Camera) :** இந்தச் சாதனம் இலக்க (digital) வடிவில் நேரடியாகப் படங்களை எடுக்கிறது. இது சிசிடி CCD (Charged Coupled Device) (மின்னேற்றப்பட்ட இணை சாதனம்) எனும் மின்னணு சில்லு (Electronic chip)-ஐ பயன்படுத்துகிறது, ஒளிவில்லை (lens) மூலம் வெளிச்சம் சில்லுவின் மீது விழும்போது ஒளிக்கதிர்கள் இலக்க முறைக்கு மாற்றப்படுகிறது.

**6. திரையகத்தின் வகைகளை எழுதுக.**

(i) CRT – கத்தோட் ரே டியூப்

(ii) LCD – லிக்விட் கிரிஸ்டல் டிஸ்பிளே

(iii) LED – லைட் எமிட்டிங் டையோட்கள்

**7. ஒளிஉரு வரைபட வரிசையின் பயன் யாது?**

திரையகம் தகவலை விஜிஏ (ஒளிஉரு வரைபட வரிசை) VGA (Video Graphics Array) மூலம் திரையில் காட்டுகிறது. விசைப்பலகை திரையகத்துடன் தொடர்பு கொள்ள ஒளிஉரு வரைபட அட்டை (Video Graphics Card) உதவுகிறது. இது கணிப்பொறி மற்றும் திரையகத்தின் இடையே இடைமுகமாக செயல்படுகிறது.

**8. அச்சுப்பொறியின் வகைகளை எழுதுக.**

(i) தட்டல் அச்சுப்பொறிகள் (Impact Printers)

(ii) தட்டா அச்சுப்பொறிகள் (Non Impact printers)

**9. தட்டா அச்சுப்பொறி என்றால் என்ன?**

இந்த வகை அச்சுப்பொறிகள் அச்சிடுவதற்கு தட்டும் (striking) பாகங்களைப் பயன்படுத்துவதில்லை இது லேசர் மற்றும் நிலைமின்னோட்ட (electrostatic) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. இந்த அச்சுப்பொறிகள் தட்டல் அச்சுப்பொறிகளைவிட வேகம் மற்றும் தரத்தில் சிறந்தது. மைப்பீச்சு (Inkjet) அச்சுப்பொறி மற்றும் லேசர் (Laser) அச்சுப்பொறி ஆகியவை தட்டா வகைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**10. விசை எவ்வாறு விசைபலகையிலிருந்து மாறுபடுகின்றது?**

ஒரு விசை என்பது கையால் சமிஞ்சை செய்வதற்கான ஒரு சாதனமாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலைமாற்றி (switch)-களை கொண்டு அழுத்துவதன் மூலம் செயல்படுகிறது. முழு அளவு விசைப்பலகை போல் அல்லாமல், நவீன விசை ஏராளமான நிலைமாற்றிகளை கொண்டிருக்கும். பொதுவாக, இந்த எண்ணிக்கை 4 மற்றும் 50க்கு இடையில் இருக்கும். விசையில் எந்தப் பலகையும் இல்லை (no board) என்ற கருத்தில்தான் விசை ஒரு விசைப்பலகையிலிருந்து மாறுபடுகிறது. ஆனால் விசைகள் ஒரு குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளது.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

**11. சார்லஸ் பாபேஜ், கணிப்பொறியின் தந்தை என்று ஏன் அழைக்கப்படுகிறார்?**

"அனலடிக்கல் இன்ஜின்" - கணித ஏரணச் செயலகத்தையும், அடிப்படை கட்டுப்பாட்டு அமைவுகளையும், உள்ளிணைந்த நினைவகத்தையும் உள்ளடக்கியது. இவரின் இந்த "அனலடிக்கல் இன்ஜின்", முதல் பொதுப்பயன் கணிப்பொறிகளை வடிவமைக்க அடிப்படையாக அமைந்தது.

**12. ஏதேனும் இரண்டு சுட்டுச் சாதனங்களை எழுதுக.**

சுட்டி, ஒளிப்பேனா.

**13. திரையில் நேரடியாக எழுதும் சாதனத்தை பற்றி குறிப்பு வரைக.**

ஒளிப் பேனா என்பது ஒரு பேனா போன்ற வடிவம் கொண்ட சுட்டிக்காட்டும் கருவி, ஒளிப் பேனாக்கள் திரையில் நேரடியாக வரையும் தன்மை கொண்டவை, ஆனால் இது பயன்படுத்தக் கடினமானது மேலும் துல்லியமாக வரைவதற்குத் துணைபுரிவதில்லை.

**14. பிக்செல்ஸ் என்றால் என்ன?**

திரையகத்தில் படங்கள் பிக்செல்ஸ் (PIXELS) எனப்படும் படக் கூறுகளுடன் உருவாக்கப்படுகின்றன.

**15. BIOS மற்றும் POST-ன் விரிவாக்கத்தை எழுதுக**

BIOS - Basic Input Ouput System

POST - Power on Self Test

**16. "மின் இணைப்பில் சுய ஆய்வு" குறிப்பு வரைக.**

நிரல் கணிப்பொறியில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் புறக்கருவிகளும் (முதன்மை நினைவகம், விசைப்பலகை, திரையகம் போன்ற), இயங்கும் நிலையில் உள்ளதா என ஆய்வு செய்யும்.

**17. வெற்றிடக்குழல் பற்றி சிறுகுறிப்பு வரைக**

வெற்றிடக் குழல்கள் எலெக்ட்ரான் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த மின்சுற்றுகளைக் கொண்டுள்ளன, ஆரம்பகாலக் கணிப்பொறிகளில் ஒரு நிலைமாற்றி அல்லது ஒரு பெருக்கியாகப் பயன்படுத்தப்பட்டன.

**18. திரிதடையகத்தின் பயனை எழுதுக.**

திரிதடையகம் ("பரிமாற்ற எதிர்ப்பாற்றல்") அரை கடத்திகளால் உருவாக்கப்படுகிறது. இது மின்னழுத்த அளவைக் கட்டுப்படுத்த ஒரு மின்னணு சமிக்ஞையின் பெருக்கம்/பண்பேற்றம் அல்லது நிலைமாற்றி ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**19. துளையிட்ட அட்டையின் பயனை எழுதுக.**

(Hollerith) அட்டைகள் என அழைக்கப்படும் துளையிட்ட அட்டைகள் காகித அட்டைகள் ஆகும். பல துளையிடப்பட்ட அல்லது சிறு துளையிட்ட அட்டைகளில் தரவைக் குறிக்கக் கை அல்லது இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

**20. ஒருங்கிணைந்த சுற்று பற்றி குறிப்பு வரைக.**

ஐசி பல சுற்றுகள், பாதைகள், திரிதடையகங்கள் மற்றும் பிற மின்னணு கூறுகளை உள்ளடக்கிய ஒரு தொகுப்பு ஆகும், இது ஒரு குறிப்பிட்ட செயல்பாடு அல்லது தொடர்ச்சியான செயல்பாடுகளைச் செய்ய, ஒருங்கிணைந்து வேலை செய்கிறது.

**21. உயர்-நிலை மொழி என்பது யாது?**

உயர்-நிலை மொழி (High-Level Language) என்பது ஒரு கணிப்பொறி நிரலாக்க மொழியாகும், இது கணிப்பொறியால் வரையறுக்கப்படாதது, எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு குறிப்பிட்ட வேலைக்காக வடிவமைக்கப்பட்டது.

**22. நுண்கணிப்பொறியின் பயன் யாது?**

நுண்கணிப்பொறி ஒரு நிலையான தனிநபர் கணிப்பொறியை விவரிக்கப் பயன்படுகிறது.

**சிறுவினாக்கள். 3 மதிப்பெண்கள்**

**1. முதன்மை மற்றும் இரண்டாம் நிலை நினைவகத்தின் வேறுபாட்டை எழுதுக.**

முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம் நிலை நினைவகம் என இருவகை நினைவகங்கள் உள்ளன. தரவு மற்றும் நிரல் கட்டளைகள் நிறைவேற்றத் தயாராக இருக்கும்போது அதனைத் தற்காலிகமாகச் சேமிக்க முதன்மை நினைவகம் பயன்படுகிறது. தரவுகளை நிரந்தரமாகச் சேமித்துவைக்க இரண்டாம்நிலை நினைவகம் பயன்படுகிறது.

